வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : சரவணகுமார்

தேதி 02.12.2025 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

- நாடாளுமன்றத்தின் குளிர் கால கூட்டத் தொடரின் 2 ஆம் நாளான இன்று, பல்வேறு பிரச்சனைகள் குறித்து எதிர்கட்சிகள் அமளியில் ஈடுபட்டதால், மக்களவை இன்று நாள் முழுவதும் ஒத்தி வைக்கப்பட்டது.

- உத்தரபிரதேசத்தின் வாரணாசியில், காசி தமிழ்ச் சங்கமம் 4.0 இன்று தொடங்கியது.

- சர்தார் வல்லபாய் பட்டேல் ஒவ்வொரு அரசியல் தலைவருக்கும் உத்வேகம் அளிப்பவர் என்று மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

- வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்ததின் இரண்டாம் கட்ட பணிகள் தொடங்கப்பட்டதில் இருந்து, இதுவரை, சுமார் 50 கோடிக்கும் அதிகமான படிவங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

நாடாளுமன்றம் 1 (18)

நாடாளுமன்றத்தின் குளிர் கால கூட்டத் தொடரின் 2 ஆம் நாளான இன்று, வாக்காளர் பட்டியல்களின் சிறப்பு தீவிர திருத்தம் உள்ளிட்ட பல்வேறு பிரச்சனைகள் குறித்து எதிர்கட்சிகள் அமளியில் ஈடுபட்டதால், மாநிலங்களவை பிற்பகல் 2 மணி வரை ஒத்தி வைக்கப்பட்டது. முன்னதாக, காலை 11 மணிக்கு சபை கூடியதும், மாநிலங்களவை தலைவர் திரு சி பி

இராதாகிருஷ்ணன் இந்தியாவிற்கான ஜார்ஜியா நாடாளுமன்ற குழுவை வரவேற்றார். ஜார்ஜியா குழுவின் வருகை இந்தியாவிற்கும், ஜார்ஜியாவிற்குமான இருதரப்பு உறவை வலுப்படுத்தும் என்று அவர் கூறினார். பூஜ்ய நேரத்தில் எதிர்கட்சி உறுப்பினர்கள் எஸ்ஐஆர் மற்றும் பிற பிரச்சனைகள் குறித்து விவாதிக்க கோரி கோஷமிட்டனர். நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜு, சபையில் சுமுகமான செயல்பாடு மற்றும் விவாதத்திற்கு மத்திய அரசு, எதிர்கட்சியினரின் கேள்விகளுக்கு பதில் அளிக்க தயாராக இருப்பதாகவும், விவாதத்தில் அவர்கள் ஈடுபட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். மாநிலங்களவை எதிர்கட்சி தலைவர் திரு மல்லிகார்ஜுன கார்கே எஸ்ஐஆர் ஒரு முக்கியமான விவகாரம் என்றும், அது குறித்து உடனடியாக விவாதிக்க வேண்டும் என்றும் கூறி போராட்டத்தில் ஈடுபட்டதால், மாநிலங்களவை பிற்பகல் 2 மணி வரை

நாடாளுமன்றம் 2 (8)

ஒத்தி வைக்கப்பட்டது. நாடாளுமன்றத்திற்கு வெளியே செய்தியாளர்களிடம் பேசிய திரு கிரண் ரிஜிஜு புதிய பிரச்சனைகளை கண்டுபிடித்து, நாடாளுமன்ற நேரத்தை எதிர்கட்சியினர் வீணடிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று விமர்சித்தார். அலுவல்களின் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும், எதிர்கட்சிகள் எழுப்பும் பிரச்சனைகள் குறித்து மத்திய அரசு விவாதம் நடத்த தயாராக உள்ளதாகவும் அவர் கூறினார். மக்களவை இன்று காலை 11 மணிக்கு கூடியதும் நடைபெற்ற நிகழ்வுகள் குறித்த ஒரு செய்தித் தொகுப்பு……..

(வாய்ஸ்)

நாடாளுமன்றம் 3 (17) (வாய்ஸ்)

காலை 11 மணிக்கு அவை கூடியதும், மக்களவை தலைவர் திரு ஓம்பிர்லா ஜார்ஜியா நாடாளுமன்ற தலைவர் ஷால்வா பப்புவாஷ்விலி தலைமையிலான ஜார்ஜியாவில் இருந்து வந்த நாடாளுமன்ற குழுவை

வரவேற்றார். அவர்களின் வருகை இரு நாடுகளுக்கும் இடையிலான உறவின் ஆழத்தின் அடையாளமாக விளங்குகிறது என்றும், இரு நாட்டு ஒத்துழைப்பையும், உறவுகளையும் மேலும் வலுப்படுத்த உதவும் என்றும் திரு பிர்லா கூறினார். மக்களவை கேள்வி நேரம் தொடங்கியதும், எதிர்கட்சி உறுப்பினர்கள் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் உள்ளிட்ட பல்வேறு பிரச்சனைகள் குறித்து கோஷமிட தொடங்கினர். இருப்பினும், அமளிக்கு இடையே உறுப்பினர்கள் எழுப்பிய பல்வேறு கேள்விகளுக்கு அமைச்சர்கள் பதில் அளித்தனர். காங்கிரஸ், திரிணாமுல் காங்கிரஸ், திமுக, சமாஜ்வாதி உள்ளிட்ட பிற எதிர்கட்சி உறுப்பினர்கள் எழுந்து நின்று கோஷமிட்டதால் மக்களவை சபாநாயகர் உறுப்பினர்களை தங்கள் இருக்கைக்கு திரும்ப செல்லுமாறு கூறி, சபையை நடத்த அனுமதிக்குமாறு வலியுறுத்தினார். கேள்வி நேரம் என்பது முக்கியமானது என்றும், ஒவ்வொரு உறுப்பினரும் அதில் பங்கேற்க வேண்டும் என்றும் திரு ஓம் பிர்லா கூறினார்.

*நாடாளுமன்றம் 4 (4)*

ஆனால், எதிர்கட்சி உறுப்பினர்கள் தங்கள் அமளியை தொடர்ந்ததால், சபாநாயகர் அவையை நண்பகல் 12 மணி வரை ஒத்தி வைத்தார். எஸ்ஐஆர் பிரச்சனையின் இழுபறி தொடர்ந்ததால் மக்களவை நாள் முழுவதற்கும் ஒத்திவைக்கப்பட்டது.

*பிரதமர் அசாம் (9)*

அசாம் மாநிலத்தின் உதய நாளான இன்று பிரதமர் திரு நரேந்திர மோடி அசாம் மக்களுக்கு தமது வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார். சுவர்க்க தேவ், சாவோலுங், சுகபாவின் தொலைநோக்கு பார்வையை நிறைவேற்ற நாட்டு மக்களின் உறுதிப்பாட்டை மீண்டும் வலியுறுத்தும் ஒரு சந்தர்ப்பம் இந்த நாள் என்று பிரதமர் தமது சமூக ஊடகப்பதிவில் குறிப்பிட்டுள்ளார். மத்தியிலும், அசாமிலும் உள்ள தேசிய ஜனநாயக கூட்டணி அரசு, அசாமின் முன்னேற்றத்தை அதிகரிக்க அயராது பாடுபட்டு வருவதாகவும்,

சமூக உள் கட்டமைப்பை மேம்படுத்துவதில் குறிப்பிடத் தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாகவும் பிரதமர் கூறினார்.

*காசி தமிழ் சங்கமம்* (17)

உத்தரபிரதேசத்தின் வாரணாசியில் காசி தமிழ்ச் சங்கமம் 4.0 இன்று தொடங்கி, வரும் 15 ஆம் தேதி வரை நடைபெற உள்ளது. தமிழ்நாட்டிற்கும், காசிக்கும் இடையிலான நாகரீக இணைப்புகள் மற்றும் காலத்தால் அழியாத பிணைப்புகளை கொண்டாடும் ஒரு நிகழ்ச்சியாக இந்த காசி தமிழ் சங்கமம் விளங்குகிறது. வடக்கு மற்றும் தெற்கு இடையேயான உறவுகளை வலுப்படுத்தும் நோக்கில் நடைபெறும் இந்த நிகழ்ச்சியை மத்திய கல்வியமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் மற்றும் உத்திரபிரதேச முதலமைச்சர் திரு யோகி ஆதித்யநாத் ஆகியோர் இணைந்து தொடங்கி வைத்தனர். இன்று மாலை நமோகாட்டில் பிரமாண்ட தொடக்க விழா நடைபெற்றது. தமிழக ஆளுநர் திரு ஆர் என் ரவி, மத்திய தகவல் ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல் முருகன், புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் ஆகியோரும் இந்நிகழ்ச்சியில் பங்கேற்கின்றனர். இந்த ஆண்டின் கருப்பொருள் தமிழ் கற்கலாம் என்பதாகும். காசி தமிழ் சங்கமத்தில் பங்கேற்பதற்காக இந்திய ரயில்வே கன்னியாகுமரி, சென்னை, கோயம்பத்தூர் மற்றும் பனாரஸ் இடையே 7 சிறப்பு ரயில்களை இயக்குகிறது.

*ராஜ்நாத் சிங்* (16)

சர்தார் வல்லபாய் பட்டேல் ஒவ்வொரு அரசியல் தலைவருக்கும் உத்வேகம் அளிப்பவர் என்று மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் கூறியுள்ளார். வதோதராவில் உள்ள சத்லி கிராமத்தில் நடைபெற்ற சர்தார் காதா நிகழ்ச்சியில் உரையாற்றிய அவர், ஒருங்கிணைந்த இந்தியாவின் சிற்பியாகவும், சமஸ்தானங்களை ஒருங்கிணைக்கும் உயர்வான பணியை பட்டேல் மேற்கொண்டதாகவும் பாராட்டினார். பட்டேலின் 150 ஆவது பிறந்த நாளை கொண்டாடுவதன் மூலம் அவரது சிந்தனை மரபை அடுத்த

தலைமுறையினருக்கு எடுத்து செல்ல பிரதமர் திரு நரேந்திர மோடி முடிவு செய்துள்ளதாக அவர் கூறினார். சர்தார் பட்டேலின் மதிப்புகளும், உத்வேகமும் இந்தியாவை தொடர்ந்து ஒன்றினைத்து விக்சித் பாரத் கனவை அடைய உதவும் என்றும் அமைச்சர் நம்பிக்கை தெரிவித்தார். கடந்த நவம்பர் 26 ஆம் தேதி கரம்சாத்தில் தொடங்கிய தேசிய பாத யாத்திரை 7 ஆவது நாளான இன்று வதோதரா வில் உள்ள சட்டி கிராமத்தை அடைந்துள்ளது என்றும், இந்த பாத யாத்திரை டிசம்பர் 6 ஆம் தேதியன்று ஒற்றுமை சிலை அருகே நிறைவடைய உள்ளது என்றும் கூறினார்.

*நிர்மலா* (14)

வெளிப்படைத் தன்மையை இணக்க கருவியாக கருதாமல், நிலையான வளர்ச்சி மற்றும் நிதி மீள் தன்மைக்கான அடித்தளமாகவும் பார்ப்பது அவசியம் என்று மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார். புதுடெல்லியில் இன்று நடைபெற்ற 18 ஆவது உலகளாவிய மன்றத்தின் குழு கூட்டத்தில் உரையாற்றிய அவர், நாடு பொருளாதார நிர்வாகத்தின் ஆழமான கொள்கையை எட்டியுள்ளது குறித்தும், வளர்ச்சியில் வெளிப்படை தன்மையின் நேரடி தாக்கம் குறித்தும் அவர் வலியுறுத்தினார். வெளிப்படை தன்மையை நிர்வாக சீர்திருத்தங்களுக்கு அப்பாற்பட்டதாக கருத வேண்டும் என்றும், கடந்த 10 ஆண்டுகளில் நாட்டில் தன்னார்வ வரி இணக்கம் கணிசமாக வலுப்பெற்றுள்ளது என்றும் அவர் கூறினார். நேர்மைக்கு வெகுமதி அளிக்கப்படும் என்றும், வரி எய்ப்பு உறுதியாக கையாளப்படும் என்றும், நாட்டு மக்கள் தற்போது வரி அமைப்பில் பங்கேற்க அதிக ஆர்வத்துடன் உள்ளனர் என்றும் அவர் உறுதிப்பட கூறினார்.

*எஸ்ஐஆர்* (10)

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்ததின் இரண்டாம் கட்ட பணிகள் தொடங்கப்பட்டதில் இருந்து, இதுவரை, 50 கோடியே, 85 லட்சத்திற்கும்

அதிகமான படிவங்கள் வாக்காளர்களிடையே விநியோகிக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. புதுச்சேரியில் கடந்த மாதம் 4 ஆம் தேதி தொடங்கிய எஸ்ஐஆர் எனப்படும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் வரும் 11 ஆம் தேதி வரை நடைபெறுகிறது. இப்பணிகளில் பிஎல்ஓ -கள் எனப்படும் வாக்குச்சாவடி நிலை அதிகாரிகளின் பங்கு முக்கியமானதாக உள்ளது. வீடு வீடாக சென்று வாக்காளர் கணக்கெடுப்பு படிவத்தை வழங்குவதிலும், பூர்த்தி செய்யப்பட்ட படிவங்களை திரும்ப பெறுவதிலும் முக்கிய பங்காற்றி வருகிறார்கள். அந்த வகையில், முதலியார்பேட்டை தொகுதிக்கு உட்பட்ட வேல்ராம்பட்டு பகுதியில், பிஎல்ஓ வாக பணியாற்றும் திருமதி சுமதியை சந்தித்தோம். எஸ்ஐஆர் பணிகளில் வாக்காளர்களின் ஒத்துழைப்பு சிறப்பாக இருப்பதாக அவர் கூறினார். இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில்……..

(வாய்ஸ் – சுமதி )

கோனார்க் விழா (16)

ஒடிசாவின் பூரி மாவட்டத்தில் உள்ள கோனார்க்கில் உலக புகழ் பெற்ற சூரிய கோவிலின் 36 ஆவது கோனார்க் விழா மற்றும் 15 ஆவது சர்வதேச மணல் கலை விழா நடைபெற்று வருகிறது. இந்தியாவின் சிறந்த பாரம்பரிய நடன வடிவங்களை காட்சிப்படுத்துவதோடு, நாட்டின் வளமான கலாச்சார நுண்ணறிவுகளையும் இந்த கோனார்க் விழா எடுத்து காட்டுகிறது. 5 நாட்கள் நடைபெறும் இந்த கோனார்க் பாரம்பரிய நடன விழாவில், சூரிய கோவில் பின்னணியில் உள்ள திறந்த வெளி ஆடிட்டோரியத்தில், பிரபல நடன கலைஞர்களின் ஒடிசி, கதக்களி, குச்சுப்பிடி, பரதநாட்டியம், உள்ளிட்ட நடன நிகழ்ச்சிகள் டிசம்பர் 5 ஆம் தேதி வரை நடைபெற உள்ளன. கோனார்க்கில் உள்ள சந்திரபாகா கடற்கரையின் தங்க மணலில் 15 ஆவது சர்வதேச மணல் கலை விழாவும் நடைபெறுகிறது. இந்தியா மற்றும் ஜப்பான், ரஷ்யா, ஸ்பெயின், இலங்கை உள்ளிட்ட வெளிநாடுகளை சேர்ந்த மணல் கலைஞர்கள் இவ்விழாவில் பங்கேற்கின்றனர். இவ்விழாக்களின் போது, பாதுகாப்பு, கூட்ட

மேலாண்மை மற்றும் பார்வையாளர்களின் வசதி ஆகியவற்றில் சிறப்பு கவனம் செலுத்தி, மாவட்ட நிர்வாகம் தேவையான ஏற்பாடுகளை செய்துள்ளது.

*திருவண்ணாமலை* (5)

*வானிலை* (8)

வங்க கடலில் நிலவிய ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் இன்று காலை காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுவிழந்துள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு செந்தாமரை கண்ணன் தெரிவித்துள்ளார். இந்த தாழ்வு மண்டலம் 3 கிலோ மீட்டர் வேகத்தில் நகர்ந்து, சென்னையில் இருந்து 30 கிலோ மீட்டர் தொலைவில் நிலை கொண்டுள்ளதால், தமிழகத்தின் பெரும்பாலான இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி-மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழைக்கு வாய்ப்பு உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

*விளையாட்டு* (5)

இத்தாலியில் நடைபெற்று வரும் சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சினேகித், ஜெர்மனியின் பான்போ மெங்-கை வீழ்த்தி, காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறி உள்ளார்.

துருக்கியில் நடைபெற்ற பாஸ் போரஸ் கோப்பை ஸ்கேட்டிங் போட்டியின் மகளிர் பிரிவில், இந்தியாவின் தாரா பிரசாத் வெள்ளி பதக்கம் வென்றார்.